**COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 381/2025**

**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. உமாதேவி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **மரு. கண்ணபிரான்** | **Calling** | : | **மனநல மருத்துவர், திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **54** |
| | | | **Dated** | : | **26.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 9 (பட்டியல் சாட்சி 18), **திருமதி. உமாதேவி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது திண்டுக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மனநல மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.082010 தேதி 11.25 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் பணியில் இருந்தபோது, 32 வயதுள்ள ராஜாராம் , த/பெ. பழனிச்சாமி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவர் அன்று தன்னை இரவு 10.20 மணிக்கு ஆதிலட்சுமிபுரம் அருகே கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் 4x2x2 செ.மீ. அளவுள்ள சிதைந்த காயம் முதுகில்

காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்பு அன்றைய தினமே ஜெயராம், த/பெ. முருகன், அவரை பஸ் முதலாளி அழைத்து வந்தார். அவரை அன்று இரவு 10.20 மணிக்கு ஆதிலட்சுமிபுரம் அருகே மூன்று நபர்கள் கத்தியால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1) வெட்டுக்காயம் வயிற்றினுடைய இடது மேல்பக்கத்தில் 4x2x2 செ.மீ. அளவில் இருந்தது.

2) வயிற்றின் நடுப்பகுதியில் ஒரு சிறு காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்படி நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **ராஜாராம், ஜெயராம் ஆகியோருடைய காயச்சான்றிதழ்கள் அ.சா.ஆ. 8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

ராஜாராம் என்பவருக்கு ஏற்பட்ட காயம் ஒரு கூர்மையான கம்பியில் போய் மோதினாலும் ஏற்படும் என்றால் சரிதான். ஜெயராம் என்பவருக்கு ஏற்பட்ட காயம் ஓடும் பேருந்தில் இருந்து கீழே ஏதேனும் தகடு போன்ற கூர்மையான பொருளின் மீது விழுந்தாலும் ஏற்படக்கூடும் என்றால் சரிதான். மேற்படி காயங்களில் புதிதான இரத்தக் கசிவு இருந்ததா என்பதை நான் கவனித்து குறிப்புகள் செய்யவில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 26.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.26 13:24:16 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 381/2025**

**Prosecution Witness : 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. தங்கவேல்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முத்துவீரன்** | **Calling** | : | **பேருந்துச்சீட்டு பரிசோதகர் (பணி ஓய்வு)** |
| **Village** | : | **அய்யம்பாளையம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **61** |
| | | | **Dated** | : | **26.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 10 (பட்டியல் சாட்சி 8), **திரு. தங்கவேல்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். பேருந்துச்சீட்டு பரிசோதகராக வேலை பார்த்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 20.10.2010 ம் தேதி இரவு 10.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது, பேருந்து நடத்துநர்களுக்கும், பயணிகளுக்கும் சண்டை வந்ததாக சொன்னார்கள். மறுநாள் காலை 10.00 மணிக்கு பேருந்தின் ஆவணங்களை எடுத்துக் கொண்டு செம்பட்டி காவல்நிலையத்திற்கு போனேன். அங்கு போய் TN 57 K 6768 பேருந்தை காவல் நிலையத்தில் இருந்து மீட்டுக் கொண்டு வந்தேன். அதை திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் காண்பித்து எங்கள் லைனுக்கு மீண்டும்

ஓடுவதற்காக கொண்டு சென்றுவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**</u>

எந்த நடத்துநரை யார் வெட்டினார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான்.

**Taken down by me/before me in open court on 26.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.26 13:24:34 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

S.C. 381/2025

**Prosecution Witness : 11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சண்முக பிரபு** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கந்தசாமி** | **Calling** | : | **திண்டுக்கல், காமராஜர் பேருந்துநிலையத்தில் செருப்புக்கடை வைத்து வியாபாரம்** |
| **Village** | : | **ஆதிலட்சுமிபுரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 39 |
| | | | **Dated** | : | 26.02.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**1, 2 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 11 (பட்டியல் சாட்சி 15), **திரு. சண்முக பிரபு** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :--**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து திண்டுக்கல், காமராஜர் பேருந்து நிலையத்து நிலையத்தில் செருப்பு கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். பழனி முருகன் என்ற பேருந்தில் 2010ம் வருடம் தேதி சரியாக ஞாபகம் இல்லை, நான் பயணம் செய்தேன். இரவு 09.30 மணிக்கு திண்டுக்கல் பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டது. ஆதிலட்சுமிபுரம் பேருந்து நிறுத்தத்தில் இரவு சுமார் 10.10 மணியளவில் வண்டி நின்றது. இரண்டு பேர் படியில் நின்று கொண்டே வந்தார்கள். அவர்கள் கேட்கும் பாட்டை போடச் சொல்லி நடத்துநர்களை வம்பிலுத்துக்

கொண்டே இருந்தார்கள். அப்பொழுது பேருந்திற்குள் கூட்டம் இல்லை. நடத்துநர்கள் மேலே வரச்சொல்லி கூப்பிட்டார்கள். பேசிக் கொண்டிருக்கும் போழுதே கூர்மையான ஏதோ ஒரு பொருளை பாக்கெட்டில் இருந்து அந்த இரண்டு நபர்களும் எடுத்து, ராஜாராம் நடத்துநரை குத்தினார்கள். பேருந்து பயணம் செய்த நாங்கள் அந்த இருவரையும் பிடிக்கப் போனோம், அவர்கள் ஆத்தூர் ரோடு வழியாக ஓடிவிட்டார்கள். 15 ஆண்டுகள் ஆனதால் அவர்களை எனக்கு அடையாளம் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

போலீசார் நான் மேற்படி பேருந்தில் பயணம் செய்ததற்கு அடையாளமாக என்னிடம் பயணச்சீட்டினை வாங்கினார்கள். யார் எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால், கத்தியால் தாக்கினார்கள். நான் சொன்னவாறு மேற்படி தேதியில், மேற்படி பேருந்தில் பயணம் செய்யவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 26.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.26 13:24:46 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.